செ.வெ.எண். 174/2009(செமதொஅ) நாள் : 22.06.2009.

**திருப்பெரும்புதூரில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கான தேசிய அளவிலான மெகா கோடை முகாமினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. எம்.எஸ்.கில் தொடங்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரிலுள்ள ராஜிவ் காந்தி இளைஞர் மேம்பாட்டு மையத்தில் தேசிய அளவிலான நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கான 12 நாள் மெகா கோடை முகாம் இன்று தொடங்கியது. இம்முகாமில் அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த 400 மாணவர்கள் பங்கேற்றனர். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. எம்.எஸ்.கில் அவர்கள் கலந்து கொண்டு இம்முகாமினை குத்துவிளக்கேற்றி வைத்து தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றியதாவது,

“60 ஆண்டுகளுக்கு மேலாக பின்தங்கியுள்ளவர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லாவிட்டால் இந்தியா வல்லரசாக மாற முடியாது. நமது நாட்டிலுள்ள 60 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் 60 ஆண்டுகளுக்கு பின்பும் அவர்களுக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அவை கிடைக்காமலே வாழ்கின்றனர். அவர்களுக்கு உரிய வாய்ப்புகள் மற்றும் ஊக்க முயற்சிகளை சரியான முறையில் அளிக்க வேண்டும்.

நாடு முழுவதும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 35 இலட்சம் பேர் உள்ளனர். அதில் பெண்களை அதிக எண்ணிக்கையில் இணைக்க வழிவகை செய்ய வேண்டும். வட மாநிலங்களில் பெண்களின் சதவீதம் பல்வேறு வகைகளில் குறைக்கப்பட்டு வருகிறது. பெண் சதவீதத்தினை குறைத்து விட்டு வேறு மாநிலங்களுக்கு சென்று இளைஞர்கள் திருமணம் செய்து கொண்டு வருவது வேடிக்கையாக உள்ளது. ஒரு குடும்பத்திலுள்ள பெண்ணுக்கு கல்வி கிடைத்தால் அந்த குடும்பமும், அந்த சமுதாயமும், அந்த கிராமமும் வளர்ச்சி அடையும். பெண்களுக்கு உரிய மரியாதையும், சம உரிமையும் அளிக்கப்பட வேண்டும். தனியார் கல்வி நிறுவனங்கள் தரமான கல்வியை நியாயமான விலையில் வழங்க வேண்டும். அதனை மாநில அரசுகள் கண்காணிக்க வேண்டும்.

உலகத்திலேயே எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்திய மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் இளைஞர்களாக உள்ளனர். வரும் காலங்களில் அவர்கள் தான் இந்தியாவை வழி நடத்த போகின்றனர். அடுத்த 40 ஆண்டுகளில் இந்தியா வல்லரசாக மாற வேண்டுமென்றால் நமது நாட்டில் நடக்கும் தேவையற்ற சிறு, சிறு பிரச்சனைகளான குருதுவாராவில் யார் நுழைய வேண்டும், கோவில்களில் யார் இருக்க வேண்டும் போன்றவற்றை தவிர்க்க வேண்டும். இளைஞர்களுக்கு தரமான கல்வி நியாயமான கட்டணத்தில் வழங்கப்படும் பட்சத்தில் இந்தியா வல்லரசாக மாற பலமான அடித்தளம் அமையும். காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் 35 ஆயிரம் தன்னார்வலர்கள் தேவைப்படுகின்றனர். அதில் 7 ஆயிரம் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் சாகச பயிற்சிகள் புரிவதற்கு வாய்ப்புகள் அளிப்பது அவசியமாகும். மலை ஏறுதல், பாலைவனத்தில் ஒட்டக சவாரி செய்தல் போன்ற பயிற்சிளை அளிக்க வேண்டும். மலையேறுதல் போன்ற சாகச பயிற்சி அளிக்க நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கான முகாம் அமைக்க உதகமண்டலத்தில் புதிய முகாம் அமைக்கப்படும். அதற்கு மாநில அரசு நிலம் வழங்க வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

விழாவில் கலந்து கொண்ட தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் தனது சிறப்புரையில்,

"தமிழ்நாட்டில் தற்போது 3 லட்சத்து 37 ஆயிரத்து 537 பேர் நாட்டு நலப்பணித் திட்டத்தில் சேர்ந்து செயலாற்றி வருகின்றனர். இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள 1780 கல்வி நிறுவனங்களின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தபடுகிறது. நாட்டு நலத்திட்டப் பணிகளுக்காக மத்திய அரசு சார்பில் ரூ.447.17 இலட்சமும், மாநில அரசு சார்பில் ரூ.319.40 இலட்சமும் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

இவ்விழாவில் ராஜிவ்காந்தி இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜசேகரன்,இ.ஆ.ப. அவர்கள் அறிமுக உரையாற்றினார். துணைத் தலைவர் திரு. சி.ஆர்.கேசவன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டனர். மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை இயக்குநர் திருமதி. சாரதா அலிகான் நன்றி கூறினார். நிறைவாக பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை தந்திருந்த மாணவ மாணவியர் தங்களது மாநிலத்தின் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் பாரம்பரிய உடைகள் அணிந்து கலைநிகழ்ச்சிகளை நடத்தினர்.

**செய்தி வெளியிடுபவர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்.**